**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 107/2014**

**PW 22**

| | | |
|---|---|---|
| Name | : | நடராஜன் |
| Father's/Husband's Name | : | கருணாகரன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.02.2025.

**A1 - 3 present.**

**முதல் விசாரணை -**

**(1)** நான் தற்போது திருவண்ணாமலை நகரம் போக்குவரத்து பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2019 ல் பணி நிறைவு பெற்றேன் . கடந்த 25.04.2013 ம் தேதியன்று தண்டராம்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது இரவு 10.00 மணியளவில் கீழ்ச்சிறுப்பாக்கம் கிராமத்தை சேர்ந்த பாலு என்பவர் நிலையம் சேர்ந்து கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 120/2013, சட்டப்பிரிவுகள் 302 இதச -ன் படி வழக்கு பதிவு செய்தேன் . **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ .சா.ஆ.14**. புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் திருவண்ணாமலை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மேல் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையையும் , புகாரையும் யாரிடம் ஒப்படைத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை . முதல் தகவல் அறிக்கையையும் , புகாரையும் அன்று இரவே நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் . எத்தனை மணிக்கு அனுப்பினேன் என்று கேட்டால் ஞாபகம் இல்லை . துரித முதல் தகவல் அறிக்கை என்பதால் அதை உடனே நேரடியாக நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கவேண்டும் என்றால் சரிதான் . ஆனால் நான் நேரடியாக சென்று நடுவரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . நான் சொல்வதுபோல் முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல .. எத்தனை மணிக்கு நீதிமன்றத்திற்கு துரித முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டது என்ற குறிப்பு பொதுநாட்குறிப்பில் இருக்கும் என்றால் சரிதான் . அது காவலர் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது . நான் சொல்வதுபோல் 25.04.2013 அன்று இரவு 10.00 மணிக்கு என்னால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல . காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் நடுவே 7 கிலோ மீட்டர் இருப்பதாக அச்சு முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 26.04.2013 ம் தேதி காலை 6.00 மணிக்கு பெறப்பட்டதாக நடுவரின் சுருக்கொப்பம் உள்ளது என்றால் சரிதான் . நான் புகார்தாரர் பாலுவின் வீட்டிற்கு சென்று அவர் வாக்குமூலத்தை பதிவு செய்து அவர் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல . அவ்வாறு பெறப்பட்ட புகார் வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்தவர் எழுத படிக்க தெரிந்தவர் என்று தெரிந்துகொண்டேன்.

(2) புகாரில் உள்ள வாசகங்கள் புகார்தாரரால் எழுதப்படவில்லை என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது . என் மேல் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்துவிட்டு வழக்கிற்கு ஏற்றவாறு முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல .. புகாரில் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகள் பெயர்கள் குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் "சாட்சிகள்" என்று எழுதப்பட்டு அது அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . எதிரிகள் மாணிக்கம் , அண்ணாமலை ஆகியோர்கள் பெயர்கள் புகாரில் இடம் பெறவில்லை என்றால் சரிதான் . முதல் எதிரியின் பெயரை மட்டும் தான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான் . என்னிடம்

கொடுத்த புகாரில் சுந்தரமூர்த்தி என் மகனை தாக்கி என் மகன் கீழே விழுந்தபின்னர் 2, 3 எதிரிகள் ஓடி வந்து ஒருத்தரை சாய்த்துவிட்டேன் உன்னையும் சாய்க்காமல் விட மாட்டேன் என்று வாசகங்கள் உள்ளதா என்றால் இல்லை. 2, 3 எதிரிகள் "உன்னை குத்தாமல் விட மாட்டேன் "என்று சொன்னதாக புகாரில் இல்லை . புகார்தாரர் தன் மகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது எதிரிகள் மாணிக்கம் மற்றும் அண்ணாமலை மிரட்டியதாக புகாரில் இல்லை .புகார்தாரர் தன் மனைவி மற்றும் மருமகன் சம்பவத்தை பார்த்ததாக புகாரில் சொல்லவில்லை.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C. Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.